யிருக்கிறது. எனவே, இப்பொழுது இல்லையென்றாலும், அதை உடனடியாகச் செய்ய அரசாங்கம் முன்வருமா என்று கேட்டுக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: இந்த பஸ் போகின்ற சாலை பழுதடைந்திருப்பதாகக் குறிப்பு இல்லை. ஆனால் அந்தச் சாலையை, 'ஃபிட்நெஸ் சர்ட்டிபிகேட்' பெற்ற பிறகுதான் பஸ் விட அனுமதி கொடுக்கப்பட்டிருக்கிறது.

** 501 வினா—திரு. ந. தருமலிங்கம் : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :*

தஞ்சை மாவட்டம், வேதாரணியத்திலிருந்து திருத்துறைப் பூண்டி—முத்துப்பேட்டை—பட்டுக்கோட்டை வழியாக அரசாங்கத்தின் விரைவுப் பேருந்து திருச்சிராப்பள்ளிக்கு விடுகின்ற செயற்குறிப்பு எதுவும் உள்ளதா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : இல்லை.

திரு. ந. தருமலிங்கம் : பேரவைத் தலைவரவர்களே, தஞ்சை மாவட்டத்தில் தென்கிழக்குக் கோடியிலுள்ள மிகப் பெரிய ஊர் வேதாரணியம். அந்த ஊரிலிருந்து திருச்சிக்கு நாள்தோறும் சுமார் 50, 60 பேர்கள் செல்லவேண்டியிருக்கிறது. ஆகவே, பட்டுக்கோட்டை, முத்துப்பேட்டை வழியாக அரசாங்கப் பேருந்து விடுவதுபற்றி அரசாங்கம் மீண்டும் ஆலோசிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : இதுபற்றி ஆலோசிக்கப்பட்டது. இப்பொழுது சேலத்திற்கும் தஞ்சைக்கும் இடையிலுள்ள அரசாங்க பஸ்ஸைக் கொண்டே மேற்படி போக்குவரத்து சமாளிக்கப்படும் என்று கருதப்படுகிறது. தற்போது வேதாரணியத்திலிருந்து திருச்சிராப்பள்ளிக்கு அரசாங்க பஸ் விட செயற்குறிப்பு இல்லை.

திரு. பி. எஸ். தனுஷ்கோடி: தலைவரவர்களே, சென்னையிலிருந்து வேதாரணியத்திற்குச் செல்பவர்களுக்கு, வேதாரணியம் முக்கியமான ஸ்தலமாக இருப்பதால் அதிகப் போக்குவரத்து இருப்பதால், சென்னையிலிருந்து வேதாரணியத்திற்கு துரிதப் பஸ் விட அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : சென்னையிலிருந்து [illegible]ணியத்திற்கு அதிக ஜனப் போக்குவரத்து இல்லை என்று [illegible]விசாரிப்பில் தெரிய வருகிறது.